[*1995 மே 5*

(ஊ) கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1995

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1995*-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் அனுமதி கோருவார்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*1995*-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

பிற்பகல் 4-05

வாய்மையே வெல்லும்
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(எ) ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1995

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1995*-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய மாண்புமிகு கல்வி அமைச்சர் அனுமதி கோருவார்.